# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மாச்சு மாதம் 31 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## 2006 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 8/2006

## 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டின் 9 ஆம் இலச்சச் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு சட்ட மானது அச்சட்டத்தின் அட்டவணையில் பாகம் 1 என்பதை நீக்கி அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் அட்டவணையைத் திருத்துதல்.

"பாகம் 1

இதற்கான, I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோ ராண்டுக்கும் குதிரைப் பந்தயப் பணயத்தொழிலர் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவரினாற் செலுத் தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக் குச் சமமானதாக இருத்தல் வேண்டும் —

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | விதிப்பனவின் தொகை |
| 1. 1988, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு | |

| | |
|---|---|
| முன்னர் தொடங்குகின்ற ஒவ் வோராண்டுக்கும். | ஓரிலட்சம் ரூபா. |
| 2. 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ் வோராண்டுக்கும். | பத்திலட்சம் ரூபா. |
| 3. 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ் வோராண்டுக்கும் — | |
| (i) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படுமிடத்து; | முப்பதாயிரம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாத விடத்து. | பத்தாயிரம் ரூபா. |
| 4. 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய் யப்படும் பந்தயத் தொழி லுக்காக — | |
| (i) முகவர்கள் மூலம். | பத்திலட்சம் ரூபா. |

| | | |
|---|---|---|
| (ii) | தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்துவதன் மூலம் | இரண்டிலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா. |
| (iii) | தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாத விடத்து | இருபத்தையாயிரம் ரூபா. |

5. 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய் யப்படும் பந்தத் தொழி லுக்காக —

| | | |
|---|---|---|
| (i) | முகவர்கள் மூலம். | பத்திலட்சம் ரூபா. |
| (ii) | தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்துமிடத்து. | மூன்றிலட்சம் ரூபா. |
| (iii) | தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாத விடத்து. | ஐம்பதினாயிரம் ரூபா. |

**3**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*